அலகு-5


# காலம்





## 5.1 நாள்காட்டி

ஒரு ஆண்டின் மாதங்களை நினைவு கூர்வோம்.

**அ. நாள்களை வரிசைப்படுத்தி புள்ளிகளை இணைத்து வண்ணமிடுக.**




**ஆ. மாதங்களை வரிசைப்படுத்தி புள்ளிகளை இணைத்து வண்ணமிடுக**




**இ. கோடிட்ட இடங்களை நிரப்புக**

1. ஒரு வருடத்தில் __________ நாள்கள் உண்டு.
2. ஒரு வாரத்தில் ___________ நாள்கள் உண்டு.
3. ஒரு வருடத்தில் ________ மாதங்கள் உள்ளன.
4. ஒரு மாதத்தில் ___________ நாள்கள் உண்டு.
5. ஒரு வருடத்தில் முதல் மாதம் ____________.
6. ஒரு வாரத்தின் முதல் நாள் ______________.

**தெரிந்து கொள்வோம்**

| | | |
|---|---|---|
| 1 வாரம் | = | 7 நாள்கள் |
| 1 மாதம் | = | 30 நாள்கள் |
| 1 வருடம் | = | 12 மாதங்கள் |
| 1 வருடம் | = | 365 நாள்கள் |
| 1 லீப் வருடம் | = | 366 நாள்கள் |

**லீப் ஆண்டு**

ஒரு லீப் ஆண்டில் 366 நாள்கள் உண்டு. லீப் ஆண்டில் பிப்ரவரி மாதத்தில் 29 நாள்கள் உள்ளன. 4 ஆண்டுகளுக்கு ஒரு முறை லீப் ஆண்டு வரும். 2016 லீப் ஆண்டாகும். 2020 உம் லீப் ஆண்டாகும். அடுத்த லீப் ஆண்டு 2024 ஆகும்.



3rd_Unit_05_Time_Term 1_TM.indd 51 2/20/2020 6:38:49 PM

## 5.2 ஒரு குறிப்பிட்ட நாள் மற்றும் தேதி அறிதல்

மகாத்மா காந்தியின் பிறந்த நாள் அக்டோபர் 1869 இரண்டாம் நாளாகும். நம் நாட்டில் தேதியைப் பின்வருமாறு குறிக்கின்றோம்.

| தேதி | மாதம் | வருடம் |
|---|---|---|
| 2 | 10 | 1869 |

1. இன்றைய தேதி என்ன?
2. உங்களுடைய பிறந்த தேதி என்ன?



### முயற்சி செய்

கீழே உள்ள நாள்காட்டியில் தேதியை வட்டமிடவும்

ஜனவரி 2018

| ஞா | தி | செ | பு | வி | வெ | ச |
|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 |
| 28 | 29 | 30 | 31 | | | |

பிப்ரவரி 2018

| ஞா | தி | செ | பு | வி | வெ | ச |
|---|---|---|---|---|---|---|
| | | | | 1 | 2 | 3 |
| 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 |
| 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | | | |

1) 2018 ஜனவரி 4 ஐ வட்டமிடுக.
2) 2018 ஜனவரி 15 ஐ வட்டமிடுக.
3) 2018 பிப்ரவரி 22 ஐ வட்டமிடுக.
4) 2018 ஜனவரி 31 ஐ வட்டமிடுக.
5) 2018 பிப்ரவரி 28 ஐ வட்டமிடுக.
6) 5/02/2018 ஐ வட்டமிடுக.
7) 26/01/2018 ஐ வட்டமிடுக.
8) ஜனவரி 2018 இல் உள்ள, ஞாயிற்றுக் கிழமைகளை வட்டமிடுக.



### செயல்பாடு 3

உங்கள் நண்பர்களின் பிறந்தநாள் இன்றைய தேதியிலிருந்து கழித்து அவர்களின் வயதை கண்டறியவும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாணவர்களின் பெயர் | | | | | |
| பிறந்த தேதி | | | | | |
| வயது | | | | | |

உங்கள் குடும்ப உறுப்பினர்களின் பிறந்த தேதியைக் கொண்டு வருடங்களை நிரப்புக.

| உறுப்பினர்கள் | பிறந்த நாள் | வயது (இன்று) | 25 ஆவது பிறந்த நாள் | 40 ஆவது பிறந்த நாள் |
|---|---|---|---|---|
| அப்பா | | | | |
| அம்மா | | | | |
| சகோதரர் | | | | |
| சகோதரி | | | | |



3rd_Unit_05_Time_Term 1_TM.indd 52
2/20/2020 6:38:49 PM

## பயிற்சி செய்

**1.** நாள்காட்டி 2018 ஐ பார்த்து, கோடிட்ட இடத்தை நிரப்புக.

### நாள்காட்டி 2018




1. ஆசிரியர் தினம் ________
2. சுதந்திர தினம் ________
3. குடியரசு தினம் ________
4. குழந்தைகள் தினம் ________

**2.** பொருத்துக

| | |
|---|---|
| நவம்பர் 15, 2018 | 26.04.2018 |
| ஜூன் 16, 2018 | 10.12.2017 |
| ஏப்ரல் 26, 2018 | 15.11.2018 |
| டிசம்பர் 10, 2017 | 26.05.2017 |
| மே 26, 2017 | 16.06.2018 |

**3.** நாள்காட்டியைப் பார்த்து பின்வரும் அட்டவணையை நிறைவு செய்க.

1. அக்டோபர் 2018 இல் உள்ள நாள்களின் எண்ணிக்கை ______________.
2. ஞாயிற்றுகிழமைகளின் எண்ணிக்கை________.
3. முதல் சனிக்கிழமை ___________________.
4. மாதத்தின் கடைசி நாள் ______________.
5. மாதத்தின் 10வது நாள் _______________.

**அக்டோபர் 2018**

| ஞா | தி | செ | பு | வி | வெ | ச |
|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 |
| 28 | 29 | 30 | 31 | | | |

6. மூன்றாவது புதன்கிழமை ________________ தேதியில் வரும்.




3rd_Unit_05_Time_Term 1_TM.indd 53 2/20/2020 6:38:50 PM

## 5.3 உற்பத்தி மற்றும் காலாவதி தேதி

உற்பத்தி தேதி அப்பொருள் செய்யப்பட்ட அல்லது உருவாக்கப்பட்ட நாளை குறிக்கும். காலாவதி தேதி அந்த பொருளை எந்த நாள் வரை பயன்படுத்தலாம் என்பதை குறிக்கும் . ஒரு பொருளை அதன் காலாவதி தேதிக்கு பிறகு பயன்படுத்த கூடாது.




உற்பத்தி தேதி: 09-07-2015
காலாவதி தேதி: 08-07-2018





உற்பத்தி தேதி: 10-12-2017
காலாவதி தேதி: 09-03-2019




உற்பத்தி தேதி: 13-11-2017
காலாவதி தேதி: 04-04-2019

### பயிற்சி செய்

**1.** பின்வரும் பொருளுக்கு உற்பத்தி தேதி மற்றும் காலாவதி தேதியை எழுதுக.

| வ.எண் | பொருள்கள் | உற்பத்தியான மாதம் (அ) தேதி | காலாவதியான மாதம் (அ) தேதி |
|---|---|---|---|
| 1 |  | | |
| 2 |  | | |
| 3 |  | | |
| 4 |  | | |



3rd_Unit_05_Time_Term 1_TM.indd 54 2/20/2020 6:38:51 PM

**2.** **உற்பத்தி தேதி மற்றும் காலாவதி தேதியைக் கொண்டு பின்வரும் பொருட்களைப் பயன்படுத்தக்கூடிய நாள்களை கண்டறிக.**

| வ.எண் | உணவுப் பொருள்களின் பெயர்கள் | உற்பத்தி தேதி | காலாவதி தேதி | வித்தியாசம் |
|---|---|---|---|---|
| 1 | தேன் | 15-07-2017 | 18-09-2019 | |
| 2 | முந்திரிப் பருப்பு | 29-12-2005 | 30-02-2008 | |
| 3 | ஊறுகாய் | பிப்ரவரி 2018 | ஏப்ரல் 2018 | |
| 4 | காபிதூள் | ஆகஸ்டு 2008 | நவம்பர் 2008 | |
| 5 | பாதாம் பால் | பிப்ரவரி 2019 | மார்ச் 2019 | |

## செயல்பாடு 4

அன்றாட வாழ்வில் பயன்படுத்தக்கூடிய பொருள்களின் உற்பத்தி தேதி மற்றும் காலாவதியான தேதியை நிரப்பவும்.

| வ.எண் | உணவுப் பொருள்களின் பெயர்கள் | உற்பத்தி தேதி | காலாவதி தேதி |
|---|---|---|---|
| 1 | | | |
| 2 | | | |
| 3 | | | |
| 4 | | | |
| 5 | | | |

## பயிற்சி செய்

1. ஒரு லீப் ஆண்டின் முதல் 5 மாதங்களில் உள்ள நாள்களின் எண்ணிக்கையைக் காண்க.
2. அடுத்த 5 லீப் ஆண்டுகளைக் கண்டறிக.
3. பின்வரும் ஆண்டுகளில் உள்ள சாதாரண ஆண்டுகளை வட்டமிடுக மற்றும் லீப் ஆண்டுகளை கட்டமிடுக.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 2015 | 2016 | 2017 | 2018 | 2019 | 2020 | 2021 |
| 2022 | 2023 | 2024 | 2025 | 2026 | 2027 | 2028 |
| 2029 | 2030 | 2031 | 2032 | 2033 | 2034 | 2035 |

LI4FKV



3rd_Unit_05_Time_Term 1_TM.indd 55 2/20/2020 6:38:52 PM